உலக ஆசிரியர் தினம் 5 ஒக்டோபர் 1999
சர்வதேச கல்வி வெளியீடு

# ஆசிரியர்கள், சமூக மாற்றத்தில் ஓர் உந்துசக்தி
# TEACHER'S A FORCE FOR SOCIAL CHANGE

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
## CEYLON TAMIL TEACHER'S UNION


தலைமைப்பணிமனை,
442, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

கொழும்புப்பணிமனை
கனடா இல்லம்,
40, மத்திய வீதி,
கொழும்பு - 15
இலங்கை.
01-527577



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலையில், முழு சமூகத்தினதும் இதயம் இருக்கின்றது.
- ஒரு நாட்டின் பாடசாலைகள் அந் நாட்டின் எதிர் காலத்தின் சிறிய அலகுகளாகும்.
- இன்று எனது வகுப்பறையில் உலகின் எதிர்காலம் இருக்கின்றது எதிர்கால உள்ளார்ந்த நன்மைக்கோ தீமைக்கோ நான் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். தவறினால் எதிர்காலத்தை திருத்தும் ஒரு சந்தர்ப்பத்தை நான் தவறவிடக்கூடும்.
- மாணவர்களுக்கு என்ன கிடைக்கிறதோ அதை அவர்கள் சமூகத்திற்குச் வழங்குவார்கள்.
- கற்பிப்பது என்பது கற்றுக்கொள்வதே.
- ஒருவர் ஆசிரியராக இருப்பதாயின் அவர் கற்றுக்கொள்பவராக இருத்தல் வேண்டும்.
- ஒரு முறை கற்பிக்க இரு முறை கற்கவேண்டும்.
- கற்பிப்பது கற்றுக்கொள்வதற்கு ஒரு உன்னதமான பாதை.
- ஒருவருக்கு தெளிவாகக் கற்பிக்கச் சிறந்த வழி தான் தெளிவாகக் கற்றுக் கொள்வதே.
- கற்பதன் மூலம் கற்பிக்கவும் கற்பிப்பதன் மூலம் கற்கவும் முடியும்.
- ஒரு மாணவனுக்கு தனது ஆசிரியரை முந்திச் செல்ல மூன்று விடயங்கள் உதவும் அவையாவன ஏராளமான கேள்விகள் கேட்டல், பதில்களை நினைவில் வைத்திருத்தல், கற்பித்தல்.
- ஒரு ஆசிரியனாக இருந்த மனிதன் மாணவன் தன்மைகளில் சிலவற்றைத் தொடர்ந்தும் வைத்திருப்பான்.
- எவர் ஒருவர் கற்பதை நிறுத்கிறாரோ அவர் வயோதிபராகிறார். 20வயதிலோ அல்லது 80வயதிலோ எவர் ஒருவர் தொடர்ந்தும் கற்கிறாரோ அவர் இளைஞராகிறார்.
- ஒரு கற்றறிந்த மனிதன் தனது செல்வங்களை தன்னுடன் வைத்திருப்பார்.
- பிள்ளைகள் பள்ளிகளில் மாத்திரம் கல்வி கற்பதில்லை அவர்கள் வாழும் சுற்றாடலும் காலமும் அவர்களில் ஆசிரியர்களால் ஏற்படுத்தப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குகளுக்கு குறைவில்லாத செல்வாக்கை செலுத்துகின்றன.

- ❖ ஆசிரியர் ஒருவரின் வகுப்பறை அந்தஸ்தை சமூகம் அங்கீகரித்து அவருக்கு அதிகாரத்தையும் உரிய பொருத்தமான வளங்களையும் வழங்கவேண்டும்.
- ❖ ஆசிரியர்கள் குறைந்த வளங்களுடன் எட்டமுடியாத இலக்குகளை அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். இதில் அதிசயம் என்னவெனில் சில வேளைகளில் இந்த அடையமுடியாத இலக்குகளை அவர்கள் அடைந்து விடுகிறார்கள்.
- ❖ ஒரு ஆசிரியர் ஒரு விளக்குப் போன்றவர் மற்றவர்களுக்கு ஒளி ஏற்றவதுடன் தன் ஒளியையும் குறைவுறாது பேணிக்கொள்வார்.
- ❖ ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள் ஏனெனில் அவர்களுக்கு அக்கறை இருப்பதால் இளம் பிராயத்தினரை கற்பிப்பது தான் அவர்கள் செய்யும் உச்சமான பணி. அதற்கு நீண்ட காலமும் பொறுமையும் அக்கறையும் வேண்டும்.
- ❖ இன்று ஏராளமான வீரர்கள் இருக்கிறார்கள். விளையாட்டு வீரர்கள், முன் மாதிரி வீரர்கள், ஊடகவியலாளர்கள். அவர்கள் வருவார்கள் அவர்களின் 15 நிமிட பிரபல்யத்துடன் அவர்கள் போய் விடுவார்கள். ஆனால் நல்லாசிரியர்களுடைய செல்வாக்கு எங்களுடனேயே தங்கிவிடுகின்றது அவர்கள் தான் உண்மையில் எம்மை உருவாக்குகிறார்கள்.
- ❖ எங்களுக்கு ஆசிரியர்கள் தேவை ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு கதாநாயகிகள்.
- ❖ ஆசிரியர்கள் சாதாரணமாக படிப்பிப்பவர்கள் மாத்திரம் அல்ல அவர்கள் இளம் பிராயத்தினர் ஏற்றமுதிர்ச்சி யடையவும் உலகையும் தம்மையும் புரிந்து கொள்ளவும் உதவும் முக்கியமானவர்கள் ஆவார்.
- ❖ ஆசிரியர்கள் உலகத்திற்கு எங்கள் கண்களைத் திறந்து விடுகின்றனர். அவர்கள் எங்கள் மத்தியில் ஆவலையும் தன்நம்பிக்கையும் வியப்பையும் ஏற்படுத்துகின்றனர். அவர்கள் வினாக்கள் வினாவ பழக்குகின்றனர். அவர்கள் எங்கள் இறந்தகாலத்துடனும் எதிர்காலத்துடனும் எங்களுக்கு இணைப்பை ஏற்படுத்துகின்றனர். அவர்கள்தான் எமது சமூக பாரம்பரியத்தின் காவலர்கள் ஆசிரியர்கள் இல்லாத வாழ்வு வாழ்வே அல்ல.
- ❖ ஒரு மாணவனின் கல்வி என்பது அவனுடைய ஆளுமையின் பூரணமான வளர்ச்சியாகும். அது மாணவருடைய பல்பரிணாம வளர்ச்சிக்கு அவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். இது ஆசிரியர்களால் மாத்திரமே சாதிக்கக் கூடிய வொன்றாகும்.

- ஒருவர் தன்னுடைய திறமையான ஆசிரியரை பாராட்டுணர்வுடன் பார்க்கிறார். ஆனால் யார் ஒருவர் தன்னுடைய உள்ளத்தை தொடுப்பரோ அவரை நன்றியறிதலுடன் பார்க்கிறார். பாடவிதானம் என்பது மிக அவசியமான மூலப்பொருள் ஆனால் உண்மையான அன்பு மாணவனுடைய ஆன்மீக வளர்ச்சிக்கும் மிக அவசியமான ஊட்டமாகும்.
- ஒரு ஆசிரியருடைய அதிவிசேட தகமையாதெனில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வி முறைகளைச் செயற்படுத்தலே.
- தமது கற்றல் அனுபவங்களை நினைவில் வைத்திருப்பவர்கள், தமது ஆசிரியரை மட்டும் மறவாதிருத்தல் அவருடைய கற்பித்தல் உத்திகளை மட்டுமல்ல.
- கற்றல் என்பது கல்வியில் மிகக் குறைந்த பகுதியே.
- தேடலை ஒத்த கற்பித்தல் முறையே மிகச்சிறந்த கற்பித்தல் முறையாகும். (எட்மண்ட் போக்)
- ஒரு ஆசிரியர் எப்போதும் தான்கற்பித்ததை ஐயம்படுமாறு கற்பிக்கவேண்டும். (ஜோசே ஓர்ரேகா வை காசற)
- கல்வி என்பது வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது அல்ல கல்வியே வாழ்க்கையாகும். (ஜோன மூயீ)
- நாம் எவ்வாறு உள்ளோமோ அவ்வாறு எம்மாற் கற்பிக்கமுடியும். (ஜீன் ஜோறஸ்)
- கற்பித்தல் முழுமை என்பது உதாரணங்களின் மூலம் கற்பித்தலாகும். (ஜேகவெுஸ் ரோகொற)
- ஒரு நல்ல ஆசிரியர் என்பவன் உன்னை உனது இலட்சிய நிலையை அடைய உதவுபவர். ஒரு நல்ல ஆசிரியர் ஒரு பத்தாண்டுக்ருப்பின் நீபுரிந்து கொள்வதை இப்போதே சொல்லுவார் (ஜீலியல வெஸ்ரர்)
- பெரும்பாலும் கனவு ஆரம்பமாவது ஒரு ஆசிரியர் உங்களை நம்பி உங்களை கட்டியிழுத்து அத்தோடு தள்ளி அடுத்த மலையைத் தாண்ட வழி நடத்துபவர் சிலவேளைகளில் உண்மை என்கிற கூர்மையான தடியால் குத்துபவர். (பின ராதர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர் என்ற புனிதமான சொல்லை விட நான் விரும்பும் வேறு சொற்கள் மொழியில் இல்லை ஒரு குழந்தை என்னை ஆசிரியர் என்று குறிப்பிடும் போதும் என் இதயம் கீதமிசைக்கும். நான் என்னையும் முழு மனித குடும்பத்தையும் நான் ஆசிரியனாவதன் மூலம் கௌரவித்துள்ளேன்.

- நீங்கள் ஒரு ஆசிரியராகத் திகழ்வதற்கான கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதற்கு நன்றி. நீங்கள் சந்தித்த சீவன்களில் முயற்சிப்பதற்கான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதற்கு நன்றி. ஒவ்வொரு சமூகத்திற்கும் உங்களைப் போல ஆட்கள் தேவை. உங்கள் பங்களிப்புக்கள் நிரந்தரமானவை நீங்கள் எங்கள் உலகைத் திருத்துகிறீர்கள் நீங்கள் அவ்வளவு முக்கியமானவர். (டொன்னா பார்கோ)

- நீங்கள் ஒரு ஆண்டுக்குத் திட்டமிட்டால் ஒரு விதையை நடுங்கள் ஒரு பத்து வருடத்திற்கானால் ஒருமரம் நாட்டுங்கள் ஒரு நூற்றாண்டிற்கானால் மக்களுக்கு கற்பியுங்கள் ஒரு முறை ஒரு விதை நாட்டும் போது ஒரு அறுவடை கிடைக்கும். மக்களுக்கு கற்பிப்பதால் நூறு அறுவடைகள் கிடைக்கும். (ருவாங் சுங்)

- ஒரு மனிதனுக்கு ஒரு மீன்கொடுத்தால் ஒருநாள் உணவளிப்பீர்கள். ஒரு மனிதனுக்கு மீன் பிடிக்க கற்றுக்கொடுத்தால் நீங்கள் அவனுக்கு வாழ்நாள் முழுவதும் உணவளிப்பீர்கள். (சீனப் பழமொழி)

- கல்வி என்பது ஒளி, அது குறைவுபடின் இருளாகும். (ரஸ்ய பழமொழி)

- கற்பித்தல் என்பது இயல்பான கலை உள்ளார்ந்த விளைவுகளின் நிறைவு உணர்வுகளின் ஆக்கம் தடைகறைவு செயற்பாட்டிற்கு முகங்கொடுத்தல். (பாடவெற கியாமாறறி)

- தகுதியற்ற ஆசிரியர் சொல்வார், நல்ல ஆசிரியர் விபரிப்பர். அதிதிறமை வாய்ந்த ஆசிரியர் செய்துகாட்டுவார் அதிஉயர்ந்த ஆசிரியர் உணரவைப்பார். (வில்லியம் ஆரதா வாட்)

- உன்னால் ஆன சகலரையும் தேடி எதிர்காலத்தில் ஆசிரியராக்கு (மடலின் புச கோலசர்)

- ஆயிரம் நாட்கள் கவனமான படிப்பதைவிட ஒரு சத்தமான ஆசிரியருடன் ஒருநாள், பெரியது. (ஜப்பான் பழமொழி)

- ஒரு ஆசிரியரிடமிருந்து இரண்டு புத்தகங்களில் உள்ளதை விட கூடுதலாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறமுடியும். (ஜேர்மன் பழமொழி)

- ❖ ஒரு குடியரசுக்கு என்ற பெரிய பரிசு கொடுக்க முடியும். அந்த இளம் பராயத்தினருக்கு கற்பிப்பது அறிவுறுத்துவதும். (சிரோ)
- ❖ ஒரு தேசிய இனம் என்ற வகையில் கல்வி முன்னேறவும் நல்ல முறையில் அமையாமல் எமது முன்னேற்றம் அமையாது. (ஜோன் கெனடி)
- ❖ அநீதி அறியாமை ஆசை ஆகியனவற்றிற்கு எதிரான போராட்டம் தொடர்ச்சியானது ஆனால் அாப்பணிப்பு உணர்வோடு தம்முயிரை ஈய்ந்தவராக தம்வாழ் நாழில் பகுதி போராட்டம் வென்று விடுவதைக் காண்பர். (ஜேம்ஸ் நில்)
- ❖ ஆசிரியர்கள் மற்றைய எல்லாவற்றையும் விட நாகரீகத்தின் காவலர்கள் (பேக்வுடைரசஸ்)
- ❖ ஆசிரியர்கள் தேசியத்தை கட்டியெழுப்புவார்கள். (டலஜிற் ரகுனநா)
- ❖ ஆசிரியர்களே என்ற முறையில் நாங்கள் நித்தமும் பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கும். அத்துடன் தொடர்ந்து முயன்று பரிசோதனைகள் மூலமும் மாற்றங்கள் மூலமும் ஒவ்வொரு பிள்ளைகளைச் சென்றடையக் கூடிய வழிகளைக் காணும் வரை முயற்சிக்க வேண்டும்.
- ❖ நான் நம்புகிறேன் ( அலபேர்டசவார்) ஆசிரியர்கள் பொறுப்புவாய்ந்து பிரதானமான உறுப்பினர்கள் ஏன்னென்றால் அவர்களுடைய தொழில்சார் நடவடிக்கைகள் உலகின் விதியையே மாற்றக்கூடியது. (கெலன கலடி கொட்)
- ❖ ஆசிரியர்கள் எப்போதும் கல்வியியலில் பிரதானமான தூண்கள். (பிரடிறிக்கோ மேயா)
- ❖ நான் எதிர்காலத்தை உணர்கிறேன் நான் கற்பிப்பதால். ( கிறிஸ்ரா)
- ❖ கற்பிப்பது என்பது எப்போதும் உயிர்களுடன் தொடர்புடையதாகும்.(அகொன்)
- ❖ ஒரு ஆசிரியர் எப்போதும் தாகமும் பெறப்படுத்துவார். அவருக்கு எப்போது தன்செல்வாக்கு நிறுத்தப்படும் என்பதைச் சொல்ல முடியாது. ( கௌறி புதூகள்)
- ❖ ஒரு ஆசிரியர் எப்போதும் நல்ல பார்வையுடையவராக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கூடிய பொறுப்புக்களைச் சமப்படுத்துதல் கூடிய கல்வித்தகமை உள்ள அலுவலகம் கல்வியை விட உள்ளது. ஒரு பிள்ளை பாடசாலையில் கல்வி கற்க ஆரம்பிக்கும் நேரம் முதல் அது பெரியவளாகி கல்வியை நிறைவு செய்யும் நேரம் வரை ஆசிரியர் உதவியாளராக வழிகாட்டியாக அறிவுறுத்துபவராக கவருபவராக இருக்கிறது. அவர்கள் இல்லாமலே எமக்கு கல்வி இல்லை. (பிஸ் நாறறி)
- கேள்வி கேட்பது கற்பித்தலுக்கு. ( சௌபோன)
- எப்படி ஆலோசனைகள் வழங்குவது என்பதை அறியவைப்பதே கற்பித்தலின் சிறந்த உத்தியாகும். (புலபோட ஈனஸ்ரின)
- ஒருவரின் சந்தோசத்தை விழித்தெளச் செய்வதும் ஆக்கரீதியாக கருத்துக் களையும் அறிவையும் வெளிப்படுத்துவது ஒரு ஆசிரியருடைய வியத்தகு ஆற்றலாகும். (ஆரொலோ பிரான்ஸ்)
- ஒருவரது உள்ளுணர்வுகளைத் தூண்டுவதை விட ஒரு ஆசிரியருக்கு வேறென்ன கடமை உண்டு. (பாரதி முகர்ஜி)
- கற்பித்தல் கலை என்பது கண்டுபிடிப்புகளுக்கு உதவுவதே. (மார்க்க வான டொறின)
- உண்மையான ஆசிரியர் தனது தனிப்பட்ட இயல்புகள் தனது மாணவர்களில் பாதிப்பை ஏற்படுத்தாது பாதுகாத்துக்கொள்வார். (பிறொன்சன அல்கொற)
- ஒரு பிள்ளைக்கு கற்பித்தலின் நோக்கம் அதை ஆசிரியர் இல்லாமல் கற்றுக்கொள்ளவைப்பதாகும். (எலபேர்ட டுபபாட)
- எந்த ஒரு பிள்ளையினதும் ஆற்றல் யாதெனில் சிக்கல் தன்மையான ஆக்கங்களை உய்த்தறியக் கூடியனவாக இருத்தல். (நே எல விலபர்)
- நடு மாணவனுடைய இனங்காணப்படாத உள்ளார்ந்த வளங்கள் சுதந்திர மான செயற்பாடுகளுக்கு ஊக்குவிக்கும் ஆசிரியரை சந்திக்கும் போது அதிசயம் ஏற்படுகிறது. (மேரி காறவவூட் பூநெல)
- எவரால் செய்யமுடியுமோ அவரால் கற்பிக்கமுடியாது. ( ஜோர்ஜ் பேரண்டசா)
- எல்லாத் தொழில்களிலும் அதியுயர்ந்த தொழிலான ஆசிரியத் தொழிலுக்கு எனக்கு அழைப்பு கிடைத்ததற்கு இறைவனுக்கு நன்றி. (ஐவன் வெலரொன பிறஸவாட்டர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்பித்தல் என்பது வழக்கொழிந்த கலை அல்ல ஆனால் அதற்கான மதிப்பு பாரம்பரியத்தை இழந்து விட்டது. ( ஜேக்கு பாரசன)

- ஒரு உலகின் முக்கியமான ஒரு தொழிலில் ஒரு உறுப்பினராக இருந்து மன்னிப்புக்கோருவதை விலக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன். ( வில்லியம் ஜிரோ)

- கற்பித்தல் என்பது உலகின் மிக முக்கிய தொழில். (யுனெஸ்கோ)

- முற்றிலும் நியாயித்தல் அடிப்படையான ஒரு சமூகத்தில் மேன்மையானவர்கள் ஆசிரியர்களாகவும் ஏனையவர்கள் வேறு தொழில்களுக்கும் சமர்பிக்கிறார்கள்.

- நல்லாசிரியர்கள் விலைமதிப்பற்றவர்கள் அல்லர். அவ் ஆசிரியர்கள் செலவை அதிகரிப்பார்கள். (பொராஸ பேர்ட்)

- ஆசிரியர்களுக்கு அவர்களுக்குரிய அங்கீகாரத்தைக் கொடாது நாங்கள் கற்கும் சமூகத்தையும் கல்வி சகாப்தத்தையும் ஏய்த்த முடியாது.

- ஆசிரியர்கள் சமூகத்தில் ஏராளமான பணிகளைச் செய்ய இருப்பது மாணவர்களுடன் மாத்திரம் அல்ல. அவர்கள் துன்பம் போக்கவும் தயாராகும் சமூக ஊழியர்களாகவும் சட்ட வல்லுநர்களாகவும் வைத்தியர்களாகவும் ஒரு சமூகத்தின் எல்லாமாக இருக்கிறார்கள்.

- ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கியஸ்தன் என்ற ஆசிரியரின் பங்கு இன்றும் வெளிவரவில்லை அவர்கள் புரிந்துணர்வுகளை வளர்ப்பவர்கள் இத்தேவை இப்போதையைவிட 21ம் நூற்றாண்டில் அதிகமாகும்.

- 21ம் நூற்றாண்டை நாம் பார்க்கும்போது எல்லாச் சமூகத்திலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன.ஆனபடியால் நான் நம்புகிறேன் ஆசிரியர்கள் தனிப்பட்டவர்களிலும் சமூகத்திலும் தேசிய நிலையிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த உதவுவார்.

- 21ம் நூற்றாண்டு கல்வி நூற்றாண்டாக்கவும் ஆசிரியர்களின் நூற்றாண்டாகவும் திகழும்.

- 20ம் நூற்றாண்டில் நிறைவு பெறாத சனநாயக மேம்பாடு மனித உரிமை மேம்பாடு சகலருக்கும் கல்வி போன்ற விடயங்களை தொடர்வதாக 21ம் நூற்றாண்டு அமையும்.

(மொழிபெயர்ப்பு உதவி திரு.நா. சோதிநாதன் முன்னாள் தலைவர். இ.த.ஆ.ச)

E.S Printers 257,1E Galle Road Wellawatte



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org